# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 33 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 33


## ஊழியர் அபிஷேக நியமனம்

ஊழியர் அபிஷேகம் புதிய ஏற்பாட்டு சபையின் ஒழுங்காக இருந்ததோடல்லாமல், வேதாகமத்திலும், புதிய ஏற்பாட்டிலும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகளோடு கொடுக்கப் பட்டுள்ளது. வரலாற்றிலே, காலகாலமாக பதவி நியமனம் என்பது அரசியலாக்கப்பட்டு, தவறுத லாகவும், துஷ்பிரயோகம் பண்ணப்பட்ட ஒன்றாகவும் மாற்றப்பட்டுள்ளது, எப்படியிருப்பினும் சபையில் ஊழியர்களை அபிஷேகம் பண்ணுவதற்கான சில கோட்டுப்பாடுகளும் ஒழுங்குகளும் கட்டாயம்.

**ஊழியர் அபிஷேக நியமனம் என்பது என்ன?**

ஊழியர்கள் தேவனுடைய பணிவிடைக்காரர்கள், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, தேவ வல்லமையினாலும், அதிகாரத்தினாலும், அபிஷேகப் படவேண்டும். பரிசுத்த ஆவியானவரால் அழைக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு ஊழியர் மேல் கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்கள் தங்கள் கைகளை வைத்து ஜெபித்து நியமிக்கப்பட வேண்டிய வேதத்தின் அடிப்படையிலான, கோட்பாடுகளுடைய பொதுவான அங்கீகாரம். தாயருடைய கிரேக்க குறிப்புகளில் அபிஷேகிப்பது என்பது அமைப்பது, வைப்பது; ஒன்றின்மேல் ஒன்றை வைப்பது, ஒரு அலுவலகத்தை நிர்வகிக்கும் படி ஒருவரை நியமிப்பது, அவருக்கு கீழே உள்ள வேலைகளை ஒழுங்குபடுத்துவது, தேர்ந்தெடுப்பது, பலர் அறியும்படி அதை அறிவிப்பதும் ஆகும்.

ஒரு திருச்சபையின் ஊழியர் நியமனம் என்பது தேவனால் அழைக்கப்பட்டு சபையின் பொறுப்பை வகிக்கும் படியாய், ஊழியம் செய்யும்படியாய் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட சபை போதகர்கள் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்து நியமனம் செய்வது, இது அதிகாரப்பூர்வமான, அனுமதிக்கப்பட்ட வேதத்தின் அடிப்படையிலான ஊழியர் நியமனம்.

பவுல் தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் "நீ குறைவா யிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன்" (தீத்து 1 : 5). தீத்து பவுலுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து கிரேத்தா தீவில் பவுல் தனக்கென விட்டு வந்த வேலையை செய்து முடிக்கிறார். யூத தேவாலயங்களில் மூப்பர்களை நியமிப்பது என்பது யூதர்களுக்கு புதிய காரியம் அல்ல.

பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தியது "நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் (2 தீமோத்தேயு 1 : 6).



**ஊழியர்கள் தேவனுடைய பணிவிடை காரர்கள் யாவரும் தேவனால் அழைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும் தெய்வீக வல்லமையினாலும் அனுக்கிரகிக்கப் பட்டவர்கள்**

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ,பரிசுத்த ஆவியானவரால் அழைக்கப்பட்டு, அவருடைய ஊழியத்திற்கு என்று பிரித்து எடுக்கப்பட்ட ஒரு நபரை அங்கீகரித்து, தெய்வீக நியமனத்தோடு சபை மூப்பர்களால் ஏற்படுத்தப்படும் அநேக நியமனங்களை வேதத்திலே காணமுடியும்.

அப்போ 13 : 2, 4 படிக்கும்போது, முன்பதாகவே ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நியமனம் அங்கே அவசியம் இல்லை.

" அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து உபவாசித்துக் கொண்டிருக்கும்போது; பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களை பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்". அங்கே அபிஷேகித்து, முத்திரையிடப்பட்ட ஊழியர்களை பரிசுத்த ஆவியானவரே அழைத்து, தெரிந்தெடுத்து, வரங்களினால் நிரப்பி அனுப்புவதை காணமுடிகிறது.

சபையில் தலைவர்களால் வழங்கப்படும் நியமன சான்றிதழ் என்கிற ஒரு வெறும் பட்டத்தை விட மேலானது இங்கே நாம் கண்ட நியமனம். தண்ணீரில் மூழ்கி எழும்பும் ஞானஸ்நானத்தைப் போன்றே ஊழியர் நியமனம் என்பது விசேஷித்த காரியமாகும்.


| | | | | |
|---|---|---|---|---|
| ஊழியர் அபிஷேகம் 1 | தலையங்கம் 3 | வேதாகமத்தின் அடிப்படையிலான தகுதிகள் 5 | நடைமுறைகள் மற்றும் நெறிமுறை 7 | உங்களுக்கு தெரியுமா? இந்த ஒழுங்கு எவ்வளவு காலம் நீடிக்கும்? 8 |
| ஒரு ஊழியத்தின் ஒழுங்கு 2 | ஊழியர் நியமனத்தின் நோக்கமும் தகுதியும் 4 - 5 | ஊழிய நியமனத்துக் குரியவர் 6 | | |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

# ஊழியத்தின் ஒழுங்கு

பரிசுத்த வேதாகமத்திலே, ஊழியர் மற்றும் உதவிக்காரர் என்கிற இரண்டு விதமான நியமனங்களை காணமுடிகிறது. ஒரு ஊழியர் நியமிக்கப்படும்போது, அவர் ஒரு போதகராக அபிஷேகிக்கப்படுகிறார். பலவிதமான வரங்களும் சபைகளும் இருப்பதுபோல உள்ளூர் ஊழியர்கள் முதற்கொண்டு பெரிய அளவிலான ஸ்தாபனம் வரைஅனைவருக்குமான ஒழுங்குகள் ஒன்றே, மேய்ப்பர் என்கிற பொதுவான குடையின் கீழ் தான், பிஷப், கண்காணி, சபைபோதகர் , இன்னும் பலர்... வேதத்திலே இது மாறி மாறி உபயோகிக்கப் பட்டுள்ளது. தீத்து 1 : 5 ல் மூப்பர் என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிரஸ்பைட்டர்ஸ் மற்றும் பிஷப்பின் தகுதிகளைக் குறித்து வசனம் 7ல் கூறப்பட்டுள்ளது. ஓவர்சீர் இவை இரண்டும் ஒன்றே ஆனால் பின்நாட்களில் கிறிஸ்தவ சபைப் பிரிவினால் இது கலங்கப்படுத்தப்பட்டுபோனது. இந்த விஷயத்தில் ஆடம் கிளார்க் என்னும் விளக்க உரையாளர் கூறுகையில், மூப்பர் என்று சொல்லப்படுகிறவர்களே தீத்து 1:7 ல் கண்காணிப்பாளர் என்று சொல்லப்பட்டுள்ளது பின்நாட்களில் வேறாக கருதப்பட்டாலும் பண்டைய அப்போஸ்தல சபைகளிலே மூப்பரும், கண்காணியானவனும் ஒன்றே என்பதற்கு பல சான்றுகள் உண்டு.

நியமிப்பது என்பது மூப்பர்களை ஏற்படுத்துவது, அது குறிப்பிட்ட ஊழிய வேலைகளை சார்ந்து, போதகர், சுவிசேஷகர், மிஷனரி என பிரிக்கப்படுவதில்லை. ஒழுக்கரீதியாக, மனப்பூர்வமாக, ஆவிக்குரிய தகுதியுள்ள ஒரு போதகர் சபையிலே அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்படுவது தீர்க்கதரிசன ஊழியங்களில் நியமிக்கப்பட்ட மூப்பர் என கூறலாம் (அப்போஸ்தலர் சபை சார்லஸ் பிரவுன், 1947. P151).

ரோமன் கத்தோலிக்க சபை வளர ஆரம்பித்து, பின்னிட்டுபோன விசுவாச மார்க்கத்தார்கள் எழும்பிய போது, ஊழியங்கள் விரைவாக வளர்ந்து, மனிதன் தனக்குள்ள பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டான். பல நூற்றாண்டுகள் கழிந்து, புதிய ஏற்பாட்டு சபையில் இல்லாத புதிய ஒரு நியமன ஒழுங்குகள் படிநிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேதாகமம் சொல்லுகிறது சபையின் அஸ்திபாரம் கிறிஸ்துவே, ஆவிக்குரிய வரங்களை தந்து, பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனை சபையை நடத்தும்படி தகுதிப்படுத்துகிறார். அவரவருக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுத்த வரங்களின்படியே கிரியை செய்ய வேண்டியது அவர்களுடைய கடமை. தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே (1 கொரிந்தியர் 14 : 32). இதனால் படிநிலை படி நியமிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்ட அமைப்பில் இது பொருந்தாது, நம்முடைய தாழ்மையான, செயல்கள் மூலம் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலும், தேவ ஊழியர்களும் ஒன்றாக செயல்பட வேண்டும்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர் களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே
- ரோமர் 10 : 14 -15

தேவனால் அழைக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் மகிமையான ஊழியத்தை விசுவாசத்துடன் செய்கிற ஒவ்வொரு தேவஊழியர்களையும் நான் மனதார வாழ்த்துகிறேன். ஊழியம் என்பது பரிசுத்த ஆவியானவர் தருகிற பரம அழைப்பு . இதைக்குறித்து இந்த இதழில் ஊழியர் அபிஷேக நியமனம் என்ன என்பதைக் குறித்து பார்க்க விரும்புகிறோம்.
உதவிக்காரர்களாகிய ஊழியர் அபிஷேக நியமனத்தைக் குறித்து அடுத்த இதழில் பார்ப்போம் இன்று பல கிறிஸ்தவ திருச்சபைகளில் அபிஷேகம் என்பது தவறாக புரிந்து கொள்ளப்பட்டு தவறாக உபயோகிக்கப்பட்டு வருவதால் அபிஷேகம் என்ற வார்த்தையை கேட்ட உடனே மனம் கசக்கிறது .ஊழியர் அபிஷேக நியமனம் என்பது எல்லோரும் சரியாக புரிந்துகொண்டால் சபைகளில் ஆசீர்வாதமான ஊழியர் அபிஷேகம் வரும் நாட்களில் காண முடியும் என்பதே என்னுடைய ஜெபம்.
ஒரு பட்டமளிப்பு சான்றிதழைக் கொண்டு ஊழியர் நியமனத்தைக் குறிப்பதை விட மிக மேலானது அபிஷேகப்படுத்துதல். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பரிசுத்த ஆவியானவரால் அழைக்கப்பட்ட ஊழியரின் வாழ்க்கை சாட்சியாக இருக்க வேண்டும் .நம்முடைய சுய எண்ணங்களையும், விருப்பங்களையும் தாண்டி தேவனுடைய சத்தியமே என்றும் மேலோங்கி நிற்க வேண்டும். கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்கள் தங்கள் கைகளை வைத்து, ஜெபித்து ஊழியர்களை அனுப்புவது எவ்வளவு ஆசீர்வாதமான அபிஷேகம்.
வேதாகம விளக்கங்கள் பல்வேறு விதமாக எடுத்துப் பிரசங்கிக்கப்பட்டாலும் ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதல் அவசியம். பல மத ரீதியான இயக்கங்களில் செயல்படுவது போல நியமனம் என்பது ஒரு அடையாளமாகவோ அல்லது பதவி படிநிலை அடிப்படைகளிலோ மேற்கொள்ளப் படக் கூடாது. எல்லா ஊழியர்களும் சமமானவர்கள். எல்லாருமே தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்திற்கு என்று அழைக்கப்பட்டவர்கள். வயதானவர்கள், இளைஞர்கள் யாரானாலும் அபிஷேகிக்கப்பட்டவர்களோ அல்லது அபிஷேகிக்கப்படாதவர்களோ அவர்களும் தேவனுடைய ஊழியத்தை அழைக்கப்பட்டதினிமித்தம் செய்துவருகிறதினால் ஊழியர்களே. இன்னொருபுறம் அபிஷேகம் என்பது முக்கியமாகும். அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்கள் கர்த்தரால் அதிகாரம் பெற்றவர்கள். மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். அபிஷேகிக்கப்படாத வர்களுக்கு இந்த அங்கீகாரம் இல்லை. நியமிக்கப்பட்ட தேவ ஊழியர்கள் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தகுதிப்படுத்தப்பட்டு, மக்களின் நம்பிக்கைக்கும் பாத்திரராகிறார்கள்.
வேதத்தில் சொல்லப்பட்டுள்ள அபிஷேக நியமன ஒழுங்குகளை கண்டிப்பாக பின்பற்றி கவனமுடன் அபிஷேகம் செய்யப்பட வேண்டும். ஒரு சபை கூட்டத்தை அல்லது குறிப்பிட்ட மனிதரையோ பிரியப்படுத்தும் நோக்கத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தகுதி இல்லாத ஒரு ஊழியர் நியமிக்கப்படும் போது அபிஷேகம் என்பது அதன் மதிப்பை இழந்து போகிறது. உலகமெங்குமுள்ள பல நாடுகளின் சபைகளில் இந்த பிரச்சனை உள்ளது. சாதகமானவர்களை உபயோகிக்கும் அரசியல் கருவியல்ல அபிஷேக நியமனம். இந்த ஊழியர் நியமனம் பரிசுத்தத்தை பாதுகாக்கும் விதமாய் நடந்து கொள்ள தேவன் தாமே நம் தேவசபைக்கு பெலன் அளிப்பாராக.
இதர சிறு குறிப்புகளாக புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள நியமிக்கப்படுதல் / ஏற்படுத்துதல் என்கின்ற வார்த்தையை குறித்துக் கொள்வோம்.(பார்க்க அப்போ 1 : 22, 1 தீமோ 2 : 7, அப்போ 14 : 23) மற்ற வேதபகுதிகளோடு ஒப்பிடும்போது முதன்மையான நியமனங்களைக் குறித்த வேதபகுதிகள் இவை. தேவ நாம மகிமைக்கென்று நம் ஒவ்வொருவரும் வாழ்வோம். சகோ.ஆஸ்டிஸ் வில்சன் கூறுகையில், நாம் தேவனை மகிழ்வித்தால் மகிழ்ச்சி அடைய விரும்புகிற யாவரையும் மகிழ்விக்க கூடும்.

## சவால்

[ சகோ ஆஸ்டிஸ் வில்சன், அப்போ 13 : 1-4 ல் சவுலையும் பர்னபாவையும் ஊழியத்திற்காக பிரித்து விடுங்கள் என்று கூறியதை மேற்கோள் காட்டியிருக்கிறார் ]

இது பரிசுத்த ஆவியானவர் ஏவுதலின்படி, உபவாசித்து ஜெபித்து செய்ய வேண்டிய பரிசுத்தமான ஒரு காரியம். அவர்கள் தவறுதலாக செய்து விடாதபடிக்கு நிச்சயத்தை பெற்றுக்கொண்டார்கள். ஆம் சகோதரரே இந்த இடத்தில் நமக்கு அறிவுறுத்தும் காரியம் என்ன? நம்முடைய அபிஷேக ஆராதனைகளில் நாம் இப்போது செய்வதை விட எவ்வளவு மேலான பரிசுத்தத்தோடும் மேலான தீவிரமான பயபக்தியுடனும் பணியாற்றி செயல்பட வேண்டியது நம் கடமை. என்னால் முடியும் என்று நானும் ஆழமாக உணர்கிறேன்

ஆன்லைனில்
அதிகமாக தெரிந்துகொள்ள
www.thegospeltruth.org
பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக

# ஊழியர் அபிஷேகம்

## நோக்கமும் தகுதியும்

**தேவசபையில் ஊழியர் நியமனம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருப்பதால், அதன் உண்மைத்தன்மையை கலங்கப்படுத்தும் விதமாக தங்களுடைய சொந்த தத்துவங்கள் மேற்கோள்கள் ஒழுங்குகளை திணிக்கக்கூடாது.**



**எந்த ஜனங்கள் மத்தியில் ஊழியஞ் செய்கிறார்களோ அவர்களுடைய அங்கீகரிப்பின் பொருட்டு செய்யப்படும் ஒழுங்கு அபிஷேகம்**

### ஆவிக்குரிய காரியத்தை உறுதிப்படுத்துதல்

ஊழியர்களை ஏற்படுத்தும் ஒழுங்கில் ஆவிக்குரிய காரியங்கள் வேதத்தின் வழியாக நாம் பின்பற்ற வேண்டி உள்ளது. பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தியது யாதெனில் மூப்பராகிய சங்கத்தார் உன் மேல் கைகளை வைத்த போது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே (1தீமோ 4 :14) இந்த வசனம் பல நடைமுறை உண்மைகளை நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

**உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே**

வரம் – கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.கேர் -ஸ்-மக் – தெய்வீக உபகாரம், ஆவிக்குரிய கொடை, மத ரீதியிலான தகுதி ,தயவு பாராட்டல்.தீமோத்தேயுவின் முழு ஊழியம் – அழைப்பு, தகுதிகள், அவன் செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகள், தேவனுடைய வரம் இவை எல்லாம் தீமோத்தேயு உதாசீனப் படுத்தி அசதியாய் இருந்து விடாமல் இருக்கவும் பவுல், அறிவுறுத்தி மீண்டும் வரத்தைக் குறித்து 2 தீமோத்தேயு 1 : 6 ல் நான் உன் மேல் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்பும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் என்றார்.தன் சொந்த மகனுக்கு அறிவுரை கூறும் தகப்பனைப் போல பவுல் கூறுகிறார். உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்தப் நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள் என்கிறார். தீமோத்தேயுவின் ஊழியம், அழைப்பு, தகுதி , வரங்கள் யாவும் தேவனுடைய கிருபையினாலே அருளப்பட்டது.ஊழியர் அபிஷேகத்தின் மூலமாக அந்த அழைப்பையும், வரங்களையும் உறுதிப்படுத்தி அங்கீகரிக்கப்பட்டவர்களாகி றார்கள். ஆகவே அபிஷேகம் என்பது வரங்களின் ஒரு பகுதியாக தீமோத்தேயுவுக்கு அருளப்பட்டிருந்தது.

**கைகளை வைத்தல்**

அபிஷேகிக்கப்பட்ட போதகர்கள் கைகளை தலை மேல் வைத்து பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பும்படியாக பவுல் எழுதி இருக்கிறார். கைகளை தலையின் மேல் வைப்பது குறித்து ஆதி 48: 14 ல் இஸ்ரவேல், எப்பிராயீம், மனாசே என்கிற யோசேப்பின் குமாரன் மேல் தன் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தான். எண்ணாகமம் 27: 18-20 ல் கர்த்தர் மோசேயை நோக்கி : யோசுவாவை ஆசாரியனாகிய எலெயாசருக்கும் சபையனைத் திற்கும் முன்பாக நிறுத்தி ,அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளை கொடுத்து இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும் படிக்கு உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்கு கொடு என்றார்.உபாகமம் 34: 9 ல் மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான். இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். புதிய ஏற்பாட்டு சபைகளில், போதகர்கள் ஜெபித்து, தலையின் மேல் கைகளை வைக்கும் போது பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்படுவார்கள். பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும் சிறப்பான ஆசீர்வாதம் வல்லமையான ஜெபத்தினாலும், அபிஷேகிக்க வேண்டிய ஊழியர் மீது வரங்களை அனல் மூட்டி எழுப்பும்படியாக அமையும். ஜெபத்தின் வல்லமையாலும் கைகளை தலையின் மீது வைப்பதினாலும் வரங்களைப் பெற்று அபிஷேகிக்கப்பட முடியும். ஜெபமும் தலையின் மீது கைகளை வைத்தலும் ஒரு மனதாக செய்யப்பட வேண்டும்.

**மூப்பராகிய சங்கத்தார்**

லூக் 22: 66 மற்றும் அப் 22 : 5 வேத வசனங்களில் சொல்லப்பட்டுள்ளபடி அபிஷேகம் என்பது ஒரு ஊழியக்காரர் அல்ல, ஒன்றுக்கும் மேற்பட்டோர் இணைந்து ஜெபித்து கைகளை வைத்து அபிஷேகித்து ஊழியக்காரரை ஏற்படுத்துவது ஆகும்.

**ஆவிக்குரிய அழைப்பின் பொது அங்கீகாரம்**

எந்த ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்கிறார் களோ அவர்களுக்கு மத்தியில் அங்கீகாரம் பெற்றவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கே அபிஷேகம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஊழியக்காரர்களை ஜனங்கள் ஏற்றுக் கொள்ளவும் நீங்கள் அவர்களுக்கு உதவி செய்யவும் கிறிஸ்துவின் கிரியைகளை நீங்களும் நடப்பித்து காண்பிக்கவும் ஏதுவாகும். ஒரு அபிஷேகிக்கப்பட்ட ஊழியர் ஜனங்களை நடத்திச் செல்லும் போது பிரச்சனை ஏற்பட்டால் அவருக்கு ஆதரவாக ஊழியத்தில் நிற்க வேண்டும். ஜனங்கள் ஒரு காரியத்தை மனதில் கொள்ள வேண்டும். அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்கள் கனம் பொருந்தியவர்கள்- கிறிஸ்துவின் சரீரம். ஆகவே தான் அபிஷேகம் மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டும். சகோ.ஆஸ்டிஸ் வில்சன் பின்வருமாறு கூறியிருக்கிறார் : அபிஷேகித்தல் என்பது அங்கீகாரத்தின் அடையாளம். அதுவே அவர்கள் ஊழியம் செய்யும் பகுதியில் ஆதரவும் சக ஊழியர்களின் ஐக்கியம் பெருகவும் உதவும். ஆகவே அபிஷேக ஆராதனை என்பது ஆழமாக செய்யப்படவேண்டும். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவ ஊழியர்கள் தங்கள் கைகளை தலையின் மேல் வைப்பதினால் பவுல் கூறியதை போல அவர்களுடைய ஆவிக்குரிய வரங்கள் அனல்

மூட்டி எழுப்பப்படும்.நாமும் இதை உணர்ந்து நம் தலைமுறை ஊழியர்கள் எழும்பும்போது ஆவிக்குரிய வரங்களை பெற்று ஆசீர்வாதமான ஊழியர்களை அபிஷேகம் பெறும்படி உற்சாகப்படுத்தவும் அபிஷேகம் செய்யப்படும்போது அவர்கள் சிறப்பான ஆசீர்வாதங்கள் பெற்றுகடந்து செல்ல(ஆதரவு –முத்திரை – ஆசிரியர்) தயார்படுத்துவோம்.

### சபை அரசாங்கம்

தீத்து 1 : 5 சொல்கிறது : நீ குறைவாயிருக் கிறவர்களை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் என்று சொல்கிறார் பவுல்.அப்படியானால் அபிஷேகிக்கப்பட வேண்டியவர்களுக்கு தேவையான தகுதிகளை அறிந்து அவர்களை ஆயத்தப்படுத்தவே தீத்துவை விட்டு வந்ததாக பவுல் கூறுகிறார்.

ஆகவே அபிஷேகம் என்பது முக்கியமான அடையாளம் ஆகும். சபைக் கூட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேவ ஊழியரை அடையாளம் காட்டி, சபையை ஆவிக்குரிய விஷயத்தில் நல்ல மணவாட்டி சபையாக மாற்ற அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்களின் அனுபவமே தேவை. துன்பமான நேரங்களில் அபிஷேக ஊழியர்களால் மாத்திரமே சபை வலுவிழந்து போகாதபடிக்கு கட்டப்பட முடியும். அதற்கு பரிசுத்த ஆவியானவரே உதவி செய்வார். பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலோடு ஊழியர்களை நியமிப்பது சபை அரசின் ஒரு பகுதி. சுயநீதியற்ற, சரியான ஆவிக்குரிய தலைவர்களால் மாத்திரமே சபை ஆவிக்குரிய வளர்ச்சியடையும். கடந்த நாட்களில் நமது தேவ ஊழியர்கள் நம்மோடு பகிர்ந்து கொண்ட விஷயங்களை தியானிப்போம்.

முதலாவது ஆதிகால சபைகள் அப்போஸ் தலர்களால் நிர்வகிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நிர்வகிப்பது என்பது உலகப்பிரகாரமாய் நாம் காணும் அமைப்பு நிர்வாகம் அல்ல. மாறாக தேவனுக்கடுத்த காரியங்களிலும், நல்லொழுக் கத்திலும், ஆழமான இறை நம்பிக்கையிலும் வல்லமையான கண்காணியும், மேய்ப்பரும் ஆவிக்குரிய மனிதர்களாய் சபையின் எல்லா சூழ்நிலைகளிலும் செயல்பட்டு வந்தார்கள்
[ அப்போஸ்தல சபை, சார்லஸ் இ.பிரவுன் 1947 123 ]

உண்மையாகவே தேவசபையில் அரசாங்கம் உண்டு. அது மனிதர்களால் நிர்வகிக்கப்படுகிறது. தேவ வரம் அருளப்பெற்ற மனிதர்களும் மற்ற ஆவிக்குரிய வரங்களை பெற்ற தேவதாசர் களும் இணைந்து பரிசுத்த ஆவியானவருடைய வழிகாட்டுதலிலும் தலைமையிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்
[ தேவசபை கோட்பாடுகள், சிசில் கார்வர், 1979, 95 ]


ஒரு ஊழியர் அவர் பணிபுரியும் மற்ற ஊழியர்களின் மத்தியிலும் பரிசுத்தவான்கள் மத்தியிலும் ஒரு சபையிலும் அவர் கடமையாற்றி முடிக்க வேண்டிய காரியங்கள், அவருடைய பொறுப்புகள், உதவி, ஆதரவு, ஒப்புதல்கள் மற்றும் அங்கீகாரம். இவை எல்லாவற்றிற்கும் தான் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற ஒப்புக் கொடுக்கப்பட்ட சுதந்திரவாளி என்று எண்ணி மேலும் மேலும் பிரயாசப்பட்டு உழைப்பவர்கள் தான் நம் தேவ சபை ஊழியர்கள். கண்காணி அல்லது மூப்பர் என்கிற ஒரு பொறுப்பை எல்லாவிதத்திலும் சபைக் கூட்டத்தார் மத்தியில் நேர்மையாக செயலாற்ற வேண்டும் எனில் முதலாவது அந்த ஊழியர் அபிஷேகம் பெற்ற மற்ற ஊழியர்களால் தங்கள் கைகளை வைத்து அபிஷேகம் செய்யப்பட வேண்டும். மந்தையை மேய்க்கும் நல்ல ஆயனாக கடமைப்பட்டுள்ளார்.சபைக்கூட்டத்தார் நடுவே ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், அதில் நடுவராக இருந்து, மரியாதையோடு அதிகாரத்தோடு செயல்பட கர்த்தர் உங்களுக்கு பெலன் தருவார்.(விசுவாசமும், ஜெயமும் ஆஸ்டிஸ் வில்சன் டிசம் 19 79).

### சட்டரீதியான அம்சங்கள்

ஒரு சபை ஐக்கியத்தின் ஊழியர் பொறுப்பு என்பதும், அவருடைய தகுதியை, பதவியை தீர்மானிப்பதும் அபிஷேக நியமனமே. அதாவது சில அரசாங்கம் மற்றும் அமைப்புகள் ஊழியம் சார்ந்து செய்ய வேண்டிய காரியங்களுக்கு சான்றளிக்க அதிகாரம் தேவைப்படுகிறது
(திருமணம் நடத்த, சிறைச்சாலை ஊழியம் விடுதிகள் நடத்த)

### தனிப்பட்ட ஏற்றுக்கொள்ளுதல்

அபிஷேகம் பண்ணப்பட்டவரோ, பண்ணப்படாத வரோ ஊழியம் என்பது தனிப்பட்டதே. தேவன் உங்களை தேற்றுவதையும், வல்லமையோடு நீங்கள் செயல்படுவதையும் உங்களுடன் இருக்கும் மற்ற ஊழியர்கள் உங்கள் மேல் உள்ள அபிஷேகத்தை உணரும் வண்ணம் உங்கள் வாழ்க்கை அமைய வேண்டும். இது மாத்திரம் அபிஷேகத்திற்கான காரணம் அல்ல. நம் வாழ்விலும், ஊழியத்திலும் ,உள்ளும் புறம்பும் எழும் எந்த ஒரு கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் இடங்கொடாதவாறு அமைக்கவும் இதன் முக்கியத்துவம் சார்ந்துள்ளது.



**நீதியின் வழியில் நடக்கும்படி ஜனங்கள் அறிந்து நடக்கவேண்டிய போதனைகளுக்கு சிறந்த தகுதியான ஆவிக்குரிய ஊழியரின் வழிகாட்டுதல் அவசியம்.**

**பிஷப் - வேதாகமத்தின் அடிப்படையிலான தகுதிகள்**

1 தீமோ 3 : 1-7

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை.
ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.
அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து,
தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்.
(ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?)
அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.
அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்.

# ஊழியரின் தகுதி

## அபிஷேகம் பண்ணுவதற்கான நிபந்தனைகள்



**ஊழியர் கிறிஸ்வின் சரீரமாகவும், ஆவிக்குரிய கோட்பாடுகளின் மாதிரி படி நடக்கிறவர்களாகவும், பரிசுத்தத்தில் கிறிஸ்துவைப் போல அவருடைய பிரதிநிதியாக செயல்பட வேண்டும்**

**தகுதிகள்** 1 தீமோத்தேயு 3 : 1 -7 வேத பகுதியில் சொல்லப்பட்டுள்ள தகுதிகள் நிச்சயமாய் ஒரு ஊழியர் என்னும் நியமனத்திற்கு பொருந்தும். மேலும் தேவனால் அழைக்கப்பட்டு, அபிஷேகம் பெற்றவராக இருத்தல் மிகவும் அவசியம். இந்த வேத வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து குணாதிசயங்களும், தகுதிகளும் ஊழியர் பொறுப்பில் இருக்கும் அனைவருக்கும் பொருந்தும். ஊழியர் அபிஷேக நியமனம் நடைபெறும் முன் தகுதியுள்ள அனைத்து விபரங்களையும் எந்த கேள்விகளுக்கும் சந்தேகங்க ளுக்கும் இடம் கொடுக்காதபடிக்கு சேகரிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரதிநிதியாக, வாழ்வின் அடையாளமாகவும் தேவனுடைய உபதேசத்தில் தேறினவராகவும், ஆவியில் கிறிஸ்துவைப் போல சாட்சியுள்ள ஜீவியம் ஜீவிக்கவும் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய அபிஷேகம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதுக்குமானது.அபிஷேகத்திற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள் தங்கள் ஊழிய பொறுப்பில் திறம்பட இருப்பதோடு மாத்திரமல்ல தேவனுடைய சபைக்கும் ஜனங்களுக்கும் பொறுப்பான மேய்ப்பன். தேவனுடைய ஜனங்களின் நம்பிக்கைக்கு பாத்திரவானாயும், ஆவிக்குரிய மற்றும் மாம்சத்திலே குற்றஞ்சாட்டப்படாதவனாயும் இருக்க வேண்டும். நாம் மாம்சீகத்தில் இருப்பதால் பலவீனப்பட்டவர்களும், கொஞ்சம் தவறியவர் களாயும் காணப்படுவது இயல்பு தான்.எனவே இதனை மிக அபிஷேகத்தின் தகுதிகளோடு மிக நேர்த்தியாக ஒப்பிட்டு பார்க்கக்கூடாது. பூரணமாக கூடுமானவரை பிரயாசப்படுங்கள்.

**தடைகள்** மேற்சொன்ன தகுதிகளோடு கூடுதலாக ஒரு சில காரியங்கள் சில சமயங் களில் அபிஷேகத்தை தடை செய்துவிடுகிறது. குடும்ப வாழ்க்கை, பிரச்சனைகளும், சோதனைகளும் ஜனங்களின் நம்பிக்கை இழப்பு, விசுவாசமில்லா ஊழியம்,ஞானமற்ற போதனை, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஒன்றாய் கட்டப்படாத நிலை இவையெல்லாம் அபிஷேகத்திற்கான தடையாகும்.

**நேரம் :** ஒரு புதிய ஊழியர் என்றால் சிறிது காலம் அவருடைய ஊழியத்தின் பாதை கவனிக்கப்பட வேண்டும். எதிரியான பிசாசானவன் கொண்டு வருகிற கண்ணிக ளையும், சோதனைகளையும் மேற்கொள்ளும் பெலனடைய வேண்டும். அவர்கள் உடனே அபிஷேகிக்கப்படக்கூடாது. சகோ சிசில் அவர் கூறுகையில், ஒரு ஊழியர் நன்மதிப்பைப் பெற்று தகுதியைப் பெறும் வரை அபிஷேகிக்கப்பட லாகாது .அவர் ஊழியத்திற்கு புதியவரல்ல என்றாலும் கவனமுடன் செயல்பட வேண்டும். அதற்காக மிக தாமதித்தலும் கூடாது (தேவ சபை கோட்பாடுகள். 1979)

தெய்வ பயத்தோடு அபிஷேக நியமனம் செய்யப்பட வேண்டும் 1 தீமோ 5 : 22 ல் ஒருவன் மேலும் சீக்கிரமாய் கைகளை வையாதே ; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே என்கிறார். ஒரு போதகர் தவறுதலாக தகுதி இல்லாத ஒருவர் மேல் தன் கைகளை வைத்து விட்டால் அதனோடு உடன் பட்டு விடுகிறார். பரிசுத்த ஆவியானவர் உறுதிப் படுத்தாமல் வேறெந்த அழுத்தங்களினாலும் ஒருவர் அபிஷேகிக்கப்படக் கூடாது.எல்லா தகுதிகளும் நிறையப் பெற்ற ஒருவர் ஒரு சில முக்கியமான அரசாங்க சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிந்து செய்ய வேண்டிய காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு (திருமணம் நடத்தி வைப்பது...) அபிஷேகிக்கப்படலாம்.இதே போல் வேறு ஒரு கிறிஸ்தவ பிரிவு சபை களில் இருந்து ஊழியத்திற்கு அழைக்கப் பட்ட அவர்களும் அபிஷேகிக்கப்படலாம். சத்திய வார்த்தைகளின் உறுதியினி மித்தம் நாட்கள் செல்ல செல்ல ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தப் படுவர்.1 தெசலோனிக்கேயர் 5 : 12 சகோதரரே, உங்களுக் குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து என்று சொல்லப்பட்டுள்ளது. தேவசபை அங்கீகாரம் அடையும் பொருட்டு ஒருவரை முழுமையாக அறியாமல் அபிஷேகித்து விடக்கூடாது.

**கருத்தில் கொள்ள வேண்டியவை**
ஒருவருடைய ஊழிய அனுபவம் இவ்வளவு வருடங்கள் என்று கருதி அபிஷேகம் என்பது போன்று எதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லை. அது ஊழியத்திற்கு ஊழியம் வேறுபடும்.
சகோ.எட் வில்சன் தேவசபையின் மூப்பர்களில் ஒருவர், இதைக் குறித்து கூறுகையில், ஒருவருடைய பிரசங்க ஊழியத்தின் அனுபவமானது 5 முதல் 7 வருடங்கள் வரை இருப்பின் அபிஷேகம் பண்ணப்படுவதைக் குறித்து பரிந்துரை செய்யலாம். ஆனால் சில காரணங்களால் பண்ணப்படாமல் தடைபடலாம்.ஆகையால் பல வருடங்களாக ஊழியம் செய்தும் கூட அபிஷேகிக்கப்படாமல் இருந்தால் அதற்கான தடைகள் என்னவென்று பொறுமையாக சிந்திக்க வேண்டும்.
ஒரு ஊழியர் வாழ்க்கையின் சில காரியங்களில் தவறியிருந்தால் தொடர்ந்து கர்த்தரிடத்தில் மன்றாடி, ஜெபித்து, ஆவியில் அனலாக எழும்ப வேண்டும். தடையாய் நிற்கும் வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம் அதனை சரிசெய்து ஊழியப் பாதையில் வளர்ச்சி அடைய வேண்டும். ஏனெனில் நற்செய்தி தொடர்ந்து பிரசங்கிக்கப்படவும், மக்களின் நலன் கருதியும் வைக்கப்பட்ட ஊழியம் தடைகளால் பின்னோக்கிப் போக கூடாது.அபிஷேகம் என்பது முயற்சியோ, முடிவோ அல்லது வெற்றியின் அளவோ அல்ல. ஆகவே ஒரு ஊழியர் அபிஷேகிக் கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப் படக் கூடாது ஒருவன் கொடுக்கும் வெகுமதி அவனுக்கு வழியுண்டாக்கி ... (நீதி 18 : 16)

ஊழியர் அபிஷேகத்தலின்

# நடைமுறை மற்றும் நெறிமுறைகள்

ஊழியர் அபிஷேகம் என்பது வரைபடம் போல் இதுதான் என்று குறிப்பிட்டு வேதத்தில் சொல்லப்படவில்லை. சில தகுதிகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு, மீதமுள்ள காரியங்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலின்படி பரிசுத்த மனுஷர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டு விட்டது, கீழே சொல்லப்பட்டுள்ள அபிஷேகித்தல் முறைமைகள் ஒரு மாதிரி விளக்கமே அல்லாமல் இது தான் ஒவ்வொரு ஊழியர் மேலும் உள்ள வேதத்தின் அடிப்படையில் அமைந்த கடமை. அன்று அப்போஸ்தலனாகிய பவுலைப் போன்று, நானும் சில காரியங்களை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவைகள் கட்டளைகள் அல்ல.

**கடமை** : அபிஷேகத்திற்கு ஒரு ஊழியரின் வாழ்வைக் குறித்து நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டியது முதலாவது கடமை.அதனை பொறுப்பெடுத்து முன்நின்று செய்கிற ஊழியர், அவரோடு ஊழியத்தில் பணியாற்றுகிற மற்ற போதகர்களுக்கும் இதே உணர்த்துதல் இருக்கிறதா என்று கலந்தாலோசிக்க வேண்டும். யாரும் பொறுப்பேற்காமல் இருந்தால் சிலவேளை அபிஷேகிக்கப்படாமல் இருக்கலாம். அதற்காக அந்த ஊழியர் மீது ஒரு மோசமான பிரதிபலிப்பாக கருதக்கூடாது.

எந்த ஒரு ஊழியரும் ஆவிக்குரிய வழிநடத்து தலின்றி வேறொரு ஊழியரை அபிஷேகிக்கப் படும்படி வற்புறுத்தக்கூடாது. சில வேளைகளில் இதினிமித்தம் பொதுவான அசௌகரியத்தை ஏற்படுத்தி விடக்கூடும். பல ஊழியர்கள் கடந்த நாட்களில் இது போன்ற அசௌகரியத்தை அனுபவித்திருக்கிறார்கள். அபிஷேகம் என்பது ஆவிக்குரிய காரியம், ஆகவே ஒருபோதும் அதனை அரசியல் மற்றும் வியாபாரம் ஆக்கக் கூடாது. ஏனெனில் இன்று பலர் பணம் கொடுத்து பட்டம் பெறுகிறார்கள். அமைதியாக சில காரியங்கள் முன்பதாக ஆலோசிக்கப்பட வேண்டும்.

**மதிப்பீடு** : ஊழியரை அபிஷேகிப்பதற்கு முன்பே ஊழியரைக் குறித்த முன்மதிப்பீட்டு விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். அபிஷேகிக்கப்பட வேண்டிய ஊழியரோடு வேதாகம விளக்கங்களைக் குறித்து விரிவாக கேட்டு வேத ஞானத்தை குறித்து தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும். பிறகு அவருடைய மனைவியையும், குடும்பத்தையும் சந்தித்து அவருடைய ஆவிக்குரிய நிலை, நம்பிக்கை, குறித்து கேட்டறிய வேண்டும், பிறகு சபை ஜனங்களுடன் கேட்டறிய வேண்டும், இந்த கேட்டறிதலின் நடுவே ஏதாவது மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிப்படலாம், ஆகவேதான் அபிஷேகப் படுத்தி விட்டு தீர்க்க முடியாத பிரச்சனைக்கு ஆளாவதை தவிர்த்து, முன்பே இவைகளை குறித்து கேட்டறிவதும், மதிப்பீடு செய்வது முக்கியம். ஊழியர் அபிஷேகித்தல் என்பது இரண்டு வழி தெரு போன்றது. தேவசபை கிறிஸ்துவின் சரீரமாக இருப்பதால், அபிஷேகிக்கப்பட வேண்டிய ஊழியர் ஆதரிக்கப்பட்டாலும் அவரும் தேவசபையின் கொள்கையை ஏற்க வேண்டும்.

தேவ சபையில் இருந்து பிரிந்து போன சில குழுவினருடைய அபிஷேகித்தல் தேவ சபையில் அங்கீகரிக்கப்படாது. ஊழியர் அபிஷேகத்தை இன்னும் முழுமையாக்கும் பொருட்டே இவையெல்லாம் சொல்லப்பட்டுள்ளதே தவிர திணிக்கும் நோக்கமில்லை. இங்கு சொல்லப் பட்டுள்ள ஒவ்வொன்றும் அபிஷேகிக்கப்பட காத்திருக்கும் ஊழியர்களை பயமுறுத்து வதற்காகவோ அல்லது தவிர்க்கப்படவோ அல்ல கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு தேவனுடைய ஆசீர்வாதம் தங்கும்படியாக நினைப்பூட்டுகிறது.

**வெளிப்படைத்தன்மை**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உடன் வேலையாட்களாகிய ஊழியரோடு, மரியாதையோடு கூடிய தொடர்பில் இருப்பது அவசியம். ஒன்றுக்கும் மேற்பட்ட அபிஷேகிக்கப்பட்ட ஒருவரை அபிஷேகிக்க வேதத்தின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேவை. பொதுவாக ஊழியத்திற்கும், சபைக்கும் ஊழியரை அபிஷேகித்து நியமிப்பது ஒரு நம்பிக்கையும், அங்கீகாரமுமாகும். அபிஷேக ஆராதனை என்பது மிகச்சரியான முறையில் சத்தியத்தின் வழியில் நடத்தப்பட வேண்டும்.

**இடம்**

விசுவாசிகளின் முன்னிலையில், ஆவிக்குரிய தேவ மனுஷர்கள் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியானவர் வழி நடத்திச் சென்று அபிஷேக ஆராதனை நடத்தப்படுவது ஆசீர்வாதமாக இருக்கும். யார் மத்தியில் ஊழியம் செய்கிறார்களோ, அவர்கள் முன்னிலையில் அபிஷேக ஆராதனை செய்யப்பட வேண்டும். ஒரு ஊழியக்காரருடைய வாழ்வில் தேவன் கொடுக்கும் மகிழ்ச்சி, கிரியைகளிலான வெளிப்படுதலே உண்மையான அங்கீகாரம்.

அபிஷேகம் என்பது வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு காரியம். இன்றும் சபைகளில் தேவன் அபிஷேகத்தின் மூலமாக கிரியை செய்கிறார் ஆகவே மிகுந்த கனத்தோடும், மகிமையோடு அபிஷேகிக்கப்படவேண்டும். பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் போதகர்கள் தங்களுக்கென்று பரிந்துரைக்கப்பட்ட அபிஷேகப்படுத்துதல் வேலையை திறம்பட செய்யக்கடவீர்கள்.
1 தீமோ 2 : 7 ல் நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும்... என்று கூறுகிறார். பவுலுடைய வாழ்க்கையிலே தெய்வீக அழைப்பினால் தேவன் தாம் அழைத்த ஊழியத்தில் பவுலை நிலைப்படுத்தினார்



ஊழியர் அபிஷேகித்தல் என்பது இரண்டு வழி தெரு போன்றது. தேவசபை கிறிஸ்துவின் சரீரமாக இருப்பதால், அபிஷேகிக்கப்பட வேண்டிய ஊழியர் ஆதரிக்கப்பட்டாலும் அவரும் தேவசபையின் கொள்கையை ஏற்க வேண்டும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?


சபையிலே தேவ மனுஷர்களாகிய ஊழியர்களை அபிஷேகிப்பது போல இயேசு கிறிஸ்துவின் வழியாக பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அடையும்படி நாடுவோம் (ஜேமிசன் – பாசட் – பிரவுன் 1தீமோ 4 :1 4)

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## ஊழியத்தின் சமநிலைப் பிரமாணம்

நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும். அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான். மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான்.இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் -மத் 23 : 8-12

ஊழியர்களின் வரங்கள், ஊழிய அழைப்பு, நிர்வாகத்திறமை இவைகளில் வேறுபட்டாலும், ஊழியங்கள் எல்லாம் ஒன்றே. இயேசு கூறுகிறார் நீங்கள் எல்லோரும் சகோதரர்கள் அவர் தலைமை சார்ந்த பதவி மற்றும் ஊழிய நிலைகளைக் குறித்து தெளிவாகப் பேசியிருக்கிறார்.



வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள அதிகாரங்கள் யாவும் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதால், யார் பெரியவன் என்ற போட்டி போடக் கூடாது. தேவ சபையில் அனைத்து ஊழியர்களும் சமமானவர்களே .அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.உங்களுக்குள்ளே அப்படி இருக்க லாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். மாற்கு 10 : 42 – 44

பெரிய வரங்களையும், அடையாளங்களையும் உடைய அப்போஸ்தலர்கள் இருந்தாலும், அவர்களோடு ஊழியஞ்செய்கிற மற்ற ஊழியக்காரரைக் காட்டிலும் அவர்களுக்கு பொறுப்பான அதிகாரம் கொடுக்கப்பட்டு இருந்தாலும், பிரிவினை ஏற்பட்டு விட ஏதுவில்லாதபடிக்கு தாழ்மையின் குணத்தோடு நடந்து கொள்வது நல்லது. (வேதாகமம் என்ன சொல்கிறது F.G. ஸ்மித் 1914, P 252).

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். பிலி 2 : 5 – 7

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**எவ்வளவு காலம் அபிஷேகம் நிலைத்திருக்கும்?**

வேதத்தின் அடிப்படையில் ஒருவருடைய குணாதிசயங்களும், போதனையும் இருக்கும்போது என்றென்றும் ஆவிக்குரிய அதிகாரமும், அபிஷேகமும் நிலைத்திருக்கும். சகோதரருக்குள்ளே பட்சமாயிருப்பது, தொடர்ந்து பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்த அபிஷேகத்தை காத்துக் கொள்ள வேண்டும்.

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316